2008 ஏப்ரல் 16]

போக்குவரத்து வசதி போன்ற வாய்ப்புகள் எல்லாம் இருக்கிற காரணத்தாலே, ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தில் தொழில்நுட்பப் பூங்கா தொடங்குவதற்கான முயற்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்ன இந்த வரிசை நிறைவுபெற்றதும், அடுத்து தஞ்சையில்தான் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் தொழில்நுட்பப் பூங்கா அமைப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது இலந்தைகுளம் என்ற பகுதியிலா அல்லது காமராஜர் யுனிவர்சிட்டி அருகிலா? எந்தப் பகுதியில் ஆரம்பிக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலந்தைகுளம் பகுதியில் அமைக்கத்தான் ஆய்வு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எந்தப் பகுதி என்பது குறித்து அழைப்பு அனுப்பப்படும். தவறாமல் அவர் வருகை தர வேண்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

102—

உழவர் சந்தை

***22454—திரு. எம். அன்பழகன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி உழவர் சந்தையில் மேலும் 15 புதிய கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பழனி உழவர் சந்தையில் 15 புதிய கடைகள் அமைக்கும் திட்டம் நடவடிக்கையில் உள்ளது. புதிதாக 15 கடைகள் அமைப்பதற்கு ரூபாய் 3.25 இலட்சத்திற்கு மதிப்பீடு அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.

திரு. எம். அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மிக்க நன்றி. மேலும், பழனி உழவர் சந்தைக்கு அகன்ற திரையுடைய digital display மற்றும் computer வசதிகளை வழங்கி இந்தியாவின் அத்தனை நகரங்களில் உள்ள விலையைக் கண்டறியக்கூடிய அளவுக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவற்றை நிறுவுவதற்குத் தனியாக ஒரு அறை அமைத்துத் தந்து, ஓசூரில் வழங்கியதுபோல் digital தராசுகளும் வழங்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி உழவர் சந்தையில் ஏற்கெனவே 60 கடைகள் செயல்பட்டு வருகின்றன. இந்தக் கடைகள்மூலம் சராசரியாக நாளொன்றுக்கு 70 விவசாயிகளால் 8,321 கிலோ காய்கறி கொண்டு வரப்பட்டு, ரூபாய் 81,241 மதிப்புள்ள காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இதனால் நாளொன்றுக்கு 2,081 நுகர்வோர்கள் பயனடைந்து வருகிறார்கள். தற்போது மேலும் 15 கடைகளைக் கூடுதலாகக் கட்டினால், 70 விவசாயிகளுக்குப் பதிலாக 90 விவசாயிகள் வரை காய்கறிகளைக் கொண்டு வருவார்கள் என்ற அந்தத் தகவல் இருக்கிறது.

2008 ஏப்ரல் 16]

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.*

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற சமயத்தில், ஒட்டன்சத்திரத்தில் மெகா உழவர் சந்தையும், குளிர்பதனக் கிடங்கும் அமைப்பதற்கு அனுமதி வழங்கி, அன்றைக்கு இன்றைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் வந்து அடிக்கல் நாட்டிவிட்டுச் சென்றார்கள். இடையிலே வந்த அரசு அந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுக்கவில்லை. மீண்டும் நமது முதல்வர், தலைவர் கலைஞர் அவர்கள் ஐந்தாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்ற பின்பு, இப்போது அந்தத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி, அந்தப் பணி முடியும் தருவாயில் உள்ளது. ஆனால், குளிர்பதனக் கிடங்கு அமைக்கின்ற பணி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய மானியக் கோரிக்கையிலே, தமிழ்நாட்டில் மிக முக்கியமான 22 உழவர் சந்தைகளில் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஒட்டன்சத்திரத்திலே மிகப் பெரிய காய்கறி மார்க்கெட் உள்ளது. எனவே, விவசாயிகளின் நலன் கருதி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஒட்டன்சத்திரத்திலே குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்காவது முறையாக தமிழகத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலத்திலேதான் ஒட்டன்சத்திரத்திலே மெகா உழவர் சந்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, நிதியும் ஒதுக்கப்பட்டது. அதற்குப் பின்னால், தொடர் நடவடிக்கை எடுக்கப்படாத காரணத்தினால் இப்பொழுது மீண்டும் முதல்வராக தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு ஆய்வு நடத்தி, அந்த மெகா உழவர் சந்தையை விரைவாகக் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு, முடியும் தருவாயில் இருக்கின்றன. குளிர்பதனக் கிடங்கு அமைக்கின்ற திட்டம் இதிலே

சேர்க்கப்படவில்லை. அதைத் தனியாகத்தான் பரிசீலிக்க முடியும். மற்ற உழவர் சந்தைகளிலே, 22 உழவர் சந்தைகளில், தமிழகத்திலே நாளொன்றுக்கு 15 டன்னுக்கு மேலே வரக்கூடிய காய்கறிகள் உள்ள சந்தைகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த 22 உழவர் சந்தைகளிலேதான், விவசாயிகள் கொண்டு வரக்கூடிய காய்கறிகள் விற்பனை ஆகாமல் இருந்தால், அந்தக் கிடங்குகளிலே வைக்கின்ற அளவுக்கு சிறிய அளவிலே அந்தக் குளிர்பதனக் கிடங்குகள் அமைக்கப்பட இருக்கின்றன. ஒட்டன்சத்திரத்திற்கென்று தனியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கின்ற கேள்வியையொட்டிப் பரிசீலிக்கப்படும்.

இன்னொன்று, நிதியைப்பற்றிக் கவலையில்லை. இந்தக் குளிர்பதனக் கிடங்கு அமைப்பதற்குத் தொழில்நுட்ப ஆலோசனைகள், அதே நேரத்திலே கட்டுமானப் பணிகளிலே ஈடுபடக்கூடியவர்களிடம் டெண்டர்கள் கோரப்பட்டால் உடனடியாகத் தகுதியானவர்கள் முன்வருவதில்லை. அதனாலேதான் இதுபோன்ற காலதாமதம் ஏற்படுகிறது. இல்லாவிட்டால், அறிவித்த அந்த நிதியாண்டிலேயே குளிர்பதனக் கிடங்குகள் கட்டுவதற்கான நடவடிக்கையும் எடுக்கலாம். ஆகவே, விரைவாக குளிர்பதனக் கிடங்குகள் கட்டுவதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

103—

ஆற்றின் கரைகள்

***14544—திரு. சபா. இராஜேந்திரன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லிக்குப்பம் தொகுதி, தென்பெண்ணை ஆற்றின் கரையைப் பலப்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?